Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (02.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 165

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு இராணுவ உதவி வழங்க அமெரிக்க அரசாங்கம் இணக்கம்

யுத்தத்தை எதிர்நோக்கி நிற்கும் இலங்கைக்கு உருப்படியான இராணுவ ஒத்துழைப்பை வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஆயினும் இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்றும் எச்சரித்துள்ளது. முழு அளவிலான யுத்தம் ஒன்றிற்குள் இலங்கை சென்று கொண்டிருப்பது பற்றி தான் கவலை கொண்டிருப்பதாகவும் அதேவேளை அரசாங்கத்துடன் இராணுவத்துறை உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதாகவும் தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியபின் கருத்துத்தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார். எமது உதவிகள் மீண்டும் போருக்குத் திரும்புவற்காக அல்ல. மூன்று தசாப்தங்களாக நடைபெற்று வரும் யுத்தத்திற்கு இராணுவத்தீர்வு உகந்தது அல்ல எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் உதவி இலங்கை மீண்டும் யுத்தத்திற்குச் செல்வதை தடுப்பதற்கானதாகும். கரையோரக் காவலுக்கு உதவக் கூடிய சாதகம் ஒன்றை அண்மையில் நாம் வழங்கியமை விடுதலைப்புலிகளை எதிர்த்து நிற்கும் இலங்கை அரசின் பக்கமாக நாம் நிற்கிறோம் என்பதை வெளிக்காட்டுவதற்கே.

1997இல் நாம் விடுதலைப்புலிகளை தடைசெய்தோம். அவ்வாறு செய்யும்படி ஐரோப்பிய ஒன்றியத்திடமும் கூறினோம். விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச நிதி உதவிகள் கிடையாது இருக்கும் வகையில் அந்நாடுகளும் தடை விதித்துள்ளன. வெளிநாடுகளில் தமிழர்களிடம் இருந்து புலிகள் நிதி திரட்டுவதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

விடுதலைப்புலிகள் பயங்கர வாதத்தை கைவிடுவார்களாயின் அவர்களுடன் நாம் உறவுகளை வைத்துக்கொள்வோம்.

நாம் இராஜ தந்திர ரீதியில் ,பொருளாதார ரீதியில்,ப[illegible]டத்துறை ரீதியில் பயிற்சிகள் மற்றும் [illegible]பகரணங்களை பகிர்ந்து கொள்ளுதல் என்பவற்றில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறோம். இவ்வாண்டு பெப்ரவரியில் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்துதல் வேண்டும்.மனித உரிமைகள் மீறப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். மீறுவோர் தண்டிக்கப்படவும் வேண்டும்.

கடந்த மாதங்களில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் தொடர்பில் பொறுமை காத்த இலங்கை அரசின் கொள்கையை வாஷிங்டன் வரவேற்கிறது. விடுதலைப்புலிகள் வன்முறைகளை கைவிட்டு பேச்சுக்களில் பங்கேற்க வேண்டும். இவ்வாறு றிச்சட் பௌச்சர் தெரிவித்தார். (ச-5,6)

# தடையை ஏற்படுத்திவிட்டு புலிகளுடன் தொடர்பைப் பேணுவதில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு என்ன பயன்



## தமிழ்ச்செல்வன் கேள்வி

(கிளிநொச்சி)

சமநிலையைகுலைத்துவிட்டுளம் முடன் தொடர்புகளைப் பேணுவதில் ஐரோப்பிய ஒன்றியம் என்ன பயன் பெறப்போகிறது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கிளிநொச்சியில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணி வரை இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இக் கேள்வியை எழுப்பியுள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவது குறித்து இன்று சர்வகட்சி மாநாடு

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்துவது தொடர்பில் அடிப்படை கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் வகையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் பங்கு பற்றுமாறு ஜனாதிபதியினால் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்படவ்வுள்ளன. இந்த அடிப்படைக் கட்டமைப்பை உருவாக உதவும் வகையில் அரசியல் அமைப்பு ஆலோசனை குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. தேசிய பிரச்சினைக்கு காணப்படும் இறுதித்தீர்வானது நாட்டிற்கு பொருத்தமானதாக அமைய வேண்டும்.

அது இந்தியா ,ஸ்கண்டிய நேவிய நாடுகள் மற்றும் கனடாவின் முறைமைகளை ஒத்ததாக இருத்தல் கூடாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் புதிய அணுகு முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் சகல தரப்பினருக்கும் பொறுப்புள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையின் பின்னர் அரசாங்கம் யுத்தம் ஒன்றுக்குச் செல்லும் என்பது பொய்யான கூற்று எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார். நேற்றுக் காலை அலரி மாளிகையில் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருணா தரப்பினரை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டத்தை மீறி தன்னால் செயற்பட முடியாது என்றும் தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற சம்பவங்களில் கூடிய அளவில் சட்டத்தை செயற்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை, மட்டக்களப்பு,யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படும் சட்டமே (08 ஆம் பக்கம் பார்க்க)

## பரு.மின்சாரசபை ஊழியர் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை அலுவலக ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். நேற்று மாலை 4.30 மணியளவில் நவிண்டில் குளக்கரை வீதியில் 42 அடி உயரமான மின் கம்பத்தில் ஏறி திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போதே அவரை மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியில் மின் தடைப்பட்டதாக மின்சார சபைக்குக்கிடைத்த தகவலையடுத்து திருத்தும் பணியை மேற்கொள்வதற்காக அவர் அங்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் இருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.தினமுரசு பத்திரிகையை விநியோகித்துக் கொண்டிருந்த போதே அவர்கள் சுடப்பட்டுள்ளனர்.

செபஸ்ரியன் தவராசா (வயது 37) மற்றும் ஆறுமுகம் லோகநாதன் (அறிவு) (வயது 19) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஈ.பி.டி.பி.அமைப்பின் உறுப்பினர்களான இவர்கள் இருவரும் கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட பத்திரிகைப் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்காக (08 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளைத் தடைசெய்ததனால் நிலைநாட்டப்போவது யாது?

மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர்

அமெரிக்க வல்லாண்மைக்கு அடிபணிந்து ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதன் மூலம் தமிழர் விடுதலைப் பயணத்தைத் தடைசெய்யலாம் அல்லது முறியடிக்கலாம் என்று கருதுமாயின் அவர்கள் தம் கனவுலகில் வாழ்கிறார்கள் என்றுதான் அதற்குப் பொருள். எந்தவொரு நாட்டின் விடுதலையும் கேட்டவுடன் கிடைக்கும் பொருளாக விளங்கியதில்லை.

சும்மா கிடைப்பதற்கு 'சுக்கா மிளகா சுதந்திரம்' என்று அன்று பாவேந்தர் பாரதிதாசன் விடுத்த வினா எம் நினைவிற்கு வருகிறது. தமிழீழ விடுதலையை எந்த சிங்கள அரசும் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை. மாறாக நாம் எம் விடுதலையைப் பெறுவது என்பது மிக வில்லங்கமான காரியந்தான். நாம் எதிர்க்காவிட்டால் அழிந்தே போய்விடுவோம். எதிர்த்தும் அழியக்கூடும். 'முற்றிய புற்றுநோயாளியை அறுவைசெய்து காப்பாற்ற முயல்வது போல் தமிழினத்தைப் பீடித்துள்ள இந்த அரசியல் புற்றுநோயை அகற்ற எம் இனத்தை மீட்க நாம் களத்தில் குதித்துள்ளோம்' என்று அன்று தந்தை செல்வா கூறிய கூற்றுச்சரியானதே. 'எந்நிலையிலும் சிங்கள இனமோ சிங்கள ஆட்சிபீடமோ எமது உரிமையை நாம் கேட்டுத் தரப்போவதில்லை. வெறி கொண்ட சிங்கள பேரினவாதிகளிடம் அற வழிப் போராட்டம் எடுபடாது. எனவே தான் ஆயுதம் தாங்கி எம் இனத் தைக் காப்பாற்ற நாம் களத்தில் குதித்துள்ளோம்' என்று எம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறியுள்ள கருத்து வரலாற்றில் பதியப்படவேண்டிய வைரம்வாய்ந்த வரிகள்.

25 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் சிங்கள அரசின் பயங்கர வாதத்தை மருந்தளவும் கவனத்தில் கொள்ளாது அரச பயங்கரவாத அட்டகாசத்தை நியாயப்படுத்த முயல்வது எம் இனம் எல்லா மட்டத்திலும் பூண்டோடு அழிக்கப்படுவதற்குத் துணை நிற்கின்றது. அரசின் அட்டகாசத்தைப் பற்றி எத்தகைய கேள்வியையும் கேட்காத ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகளைத் சீண்டுவதிலும் எம்மைச் சீற்றம் கொள்ளச் செய்வதிலும் தனி இன்பம் காண்கிறது. இதனையொட்டி சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தேவையற்றுக் குற்றம்காண முயன்றதைக் கண்டித்து நான் விடுத்த அறிக்கை டெய்லி மிரர் உட்பட ஏனைய தமிழ் ஊட கங்களில் முதன்மை பெற்ற அறிக்கையாக வெளிவந்தது. நவாலித் தேவாலயம் உட்பட மற்றைய வழிபாட்டு நிலையங்களில் வழிபடச் சென்ற பக்தர்கள், குழந்தைகள் கோயிலின் உள்ளேயே குண்டு வீசிப் பொசுக்கப்பட்டதை நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். மறைந்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்கிறிஸ்தவராய் இருந்த போதும் தம் முன்னோரின் மானிப்பாய் மண்ணில் நவாலியூர் தேவாலயத்தில் நடந்த கொடுமைகளை மூடி மறைக்க முனைந்ததையும் அவ்வறிக்கையில் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

15 நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உரிமைக் குரல் நிகழ்வு தாயகத்தின் அவலங்களை எடுத்துக்காட்டிய போதும் இத் தடை அறிவிக்கப்பட்டுள்ளது. 15 நாடுகளில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை அந்நாட்டு அரசு நிறுத்தவேண்டும் என்றும் இதற்காக அமெரிக்க அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் அமெரிக்காவில் உள்ள 15 தமிழ் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ்ச்சங்கம்– கலிபோர்னியா, இலங்கை தமிழ்ச்சங்கம்-ப்ளோரிடா, இலங்கை தமிழ்ச்சங்கம்-ஹஸ்டன், டெக்ஸாஸ், ஓகியோ தமிழ் அமைப்பு – ஓகியோ, தமிழ் அகதிகள் மறுவாழ்வு அமைப்பு- கலிபோர்னியா, அமெரிக்க தமிழ் அமைப்பு, தமிழர் நல்வாழ்வு மற்றும் மனிதஉரிமைகள்குழு–கொலம்பியா, உலகத் தமிழர் அமைப்பு- இல்லினாய்ஸ், உலகத்தமிழ் பெண்கள் அமைப்பு, உலகத்தமிழர்ஒருங்கிணைப்புக்குழு ஆகிய அமைப்புகள் ஓங்கி ஒலித்த போதும் ஐரோப்பிய ஒன்றியம் செவிசாய்க்க மறுத்திருப்பது செவிடன் காதில் சங்கு ஊதிய நிகழ்ச்சியாகவே உருவெடுத்துள்ளது.

தமிழனை நிந்தனை செய் யும் மஹிந்த சிந்தனையைத் தந்துள்ள ஜனாதிபதி ஜனாதிபதியாக தான் இருப்பதனால் எத்தகைய குதர்க்கவாதமும் பேசலாம் என்று கருதி விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதன் மூலம் தான் அவர்களை வழிக்குக் கொண்டு வரலாம்; பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச் செய்யலாம் என 'ஒரு பெரிய கண்டுபிடிப்பைக்' கண்டுபிடித்த தாகக் கொக்கரிக்கிறார்கள். நாம் அவரைக் கேட்கும் ஒரே கேள்வி இது தான்: தடைசெய்யப்படும் இயக்கத்துடன் நீங்கள் நடாத்துகின்ற பேச்சுவார்த்தை வெற்றியளிப்பினும் அது சட்டவலுப் பெற்ற ஒப்பந்தமாகக் கொள்வதற்குச் சட்டத் தில் இடமுண்டா என்று நாம் கேட்க விரும்புகின்றோம். மஹிந்த சிந்தனைக்கு ஒத்து ஓதும் பேரினவாத சிங்களக் கும்பலிடமும் நாம் விடுக்கின்ற வினா இதுதான். விடு தலைப் புலிகள் இயக்கத்திற்கு சட்ட அடிப்படையில் ஒப்புதல் வழங்கினால் தான் நாம் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை ஏற்றுத் தானே விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை இலங்கை அரசால் நீக்கப்பட்டது.

கருணா குழுவினரை ஈ.பி.டி.பியினரை அரசு கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்று இலங்கைக்கு உதவி வழங்கவிருக்கும் இணைத் தலைமை நாடுகள் எடுத்துரைத்துள்ளன. இவர்களை அகற்றுவற்கு சிறிலங்கா அரசு இசைதல் வேண்டும் என்பதுதான் சென்ற பெப்ரவரி 22இல் நடைபெற்ற ஜெனீவா மாநாட்டில் எடுக்கப் பட்ட முடிவு, இவர்கள் அகற்றப்பட்ட நிலையிற்றான் சென்ற ஏப்ரல் 19 ஆம் திகதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள படைமுகாங்களை அகற்றல், மக்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரச் செய்தல் போன்றவை ஆராயப் படவிருந்தன. ஆனால் பெப்ரவரி 22 தொடங்கி ஏப்ரல் 7ஆம் திகதிவரை விடுதலைப்புலிகள் எத்தகைய தாக்குதல்களையும் நடாத்தவில்லை. ஆனால் பெப்ரவரி 7ஆம் திகதி தமிழர் தேசியக் கூட்டமைப் பின் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட விருந்த திருமலைத் தமிழர் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் அவர் பணிபுரிந்த இலங்கை வங்கியின் வாயிலில் உயர் பாதுகாப்பு வலயத்தில் ஈவிரக்க மற்ற நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து தான் திருமலை எரி மலையாகியது. தமிழீழம் கொந் தளித்தது. நாடு எங்கணும் அல்லோகல்லோல நிலைக்கு ஆளாகியது.

விடுதலைப்புலிகள் மீது வீண் பழியை அவர்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்க உலக நாடுகளும் சிங்கள அரசும் ஒத்து ஓத எவரும் விரும்பாத விளைவு கள் இத்தீவில் ஏற்படப்போகிறது இவ் விளைவிற்கு ஐரோப்பிய ஒன்றியமும் சிறிலங்கா அரசுமே பொறுப்பேற்க வேண்டும், கடும் போக்காளர்களை உயர் பதவிகளுக்கு நியமித்துள்ள ஜனாதிபதி கடும் போக்காளர்களின் போக்கிற்கு தான் பொறுப்பில்லை எனத் தட்டிக்கழிப் பாராயின் உலகம் அவர் போக்கைக் கண்டு எள்ளி நகையாடுவது உறுதி.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு அமைய எரிமலையாகியுள்ள திருமலையில் ஒரு முன்னால் படைத்தளபதியை அரச முகவராக நியமிக்க இருப்பதாக வெளிவந்துள்ள செய்தி மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே மாறப்போவது உறுதி. வரலாற்றுக் காலத்திற்கு முன்பேயே திருமலை தமிழர் மண் என்பது உலகம் ஒப்புக்கொண்டுள்ள மறக்கமுடியாத உண்மை. இதை மாற்றியமைக்கின்ற முறையில் திருமலையில் அடுத்தடுத்து சிங்களவர்களை அரச அதிபர்களாக நியமித்துள்ள சிங்கள அரசு இப்பொழுது முன்னால் படைத்தளபதியை அரச முகவராக்க முனைவது எங்கே கொண்டே முடிக்கும் என்பதை சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள் சிந்திப்பார்களாக.

அதேவேளையில் வெலிக்கந்தை ஓமடியாமடு குடியேற்றக் கிராமத்தில் 13 சிங்களவர்கள் கொல்லப்பட்டதையடுத்து இப் பழியையும் விடுதலைப்புலிகள் மீது சுமத்த அரசு முயல்கிறது. தமக்கும் இக் கொலைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்பதோடு இக் கொலையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் விடுத லைப்புலிகள் பொறுப்புணர்ச்சியோடு விடுத்துள்ள அறிக்கையை அரசு ஏற்கத் தயங்கின் அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

## இராசிபலன்

**02.06.2006**
**(வைகாசி 19, வெள்ளிக்கிழமை)**
**சஷ்டி பிற்பகல் 2.15 மணிவரை**
**ஆயிலியம் பிற்பகல் 2.52 மணிவரை**
**இராகுகாலம் 10.22-11.52மணிவரை**
**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**
**சஷ்டி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், தன்னம்பிக்கைக்குறைவு, எடுத்த காரியம் கைகூடும், புதிய தகவல். |
| இடபம் | மனோதைரியம், நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | மனோ சங்கடம், போசன சுகக்குறைவு, பொருள் விரயம், குடும்பசுகம். |
| கடகம் | வருமானம், மாதர்நட்பு, போசனசுகம், நல்ல முயற்சி. |
| சிங்கம் | சோம்பல்நிலை, பிறருக்கு உதவுதல், தனவிரயம், குடும்பக்கவலை. |
| கன்னி | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், முயற்சி கைகூடும். |
| துலாம் | பிரபுத்தனம், நன்கொடை, ஆரோக்கியம், காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | வேலைச்சுமை, வீண்பயம், புதிய முயற்சி, பணவிரயம். |
| தனுசு | முழக்கால் வலி, பொருள் விரயம், மனக் கவலை, எடுத்த காரியம் தாமதம். |
| மகரம் | தெய்வதரிசனம், தேகநலன், பொருள் சேர்க்கை, செல்வாக்கு. |
| கும்பம் | சந்தோசமான சம்பவும், ஆரோக்கியம், காரிய நன்மை, சத்துரு ஜெயம். |
| மீனம் | அஜீரணக் கோளாறு, தாழ்ந்த சுவாவம், காரிய இடையூறு, வருமானம்குறைவு. |

- வளவன்

# எமது தலைமையின் கரத்தை பலப்படுத்தி உரிமைக்காக போராட வேண்டும்!

எஸ்.ஜெயானந்த மூர்த்தி எம்.பி.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள நடவடிக்கையானது தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்து அவர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆப்பு வைத்துள்ள செயலாகுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்ஜெயானந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் மக்கள் பெரும் பான்மையின்மையின மக்களாலும் பேரினவாத அரசுகளாலும் அடக்குமுறைக் குட்படுத்தப்பட்டே வந்தனர். இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் அரசியல் தலைவர்கள் சாத் வீகப் போராட்டத்தை நடத்தினர்.

ஆனால் எப்போராட்டமும் பேரினவாத அரசுகளின் காதுகளில் விழவில்லை. இப் போராட்டங்களெல்லாம் தோற்றுப்போனதன் காரணமாகவே 1977 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. அதில் தமிழீழமே முடிந்த முடிவு என்பது உறுதிசெய்யப்பட்டது. இதன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

அந்த ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடைந்து இன்று தமிழ் மக்கள் மத்தியில் அது வியாபித்துள்ளதுடன் ஒரே தலைவன் ஒரே கொள்கை என்ற நோக்கில் இன்று பரிணாமம் பெற்றுள்ளது. இந்த நிலையில் படைச்சமநிலை மற்றும் சமவலு என்ற ரீதியில் இலங்கை அரசு போர்நிறுத்த ஒப்பந்தத்தைச்செய்து பேச்சுவார்த்தை என்ற போலி நாடகத்தை நடத்தி வந்தது மாத்திரலமல்ல தமிழ் மக்களை ஏமாற்றியும் வந்தது. இந்த ஏமாற்று நாடகங்களெல்லாம் சர்வதேச சமுகத்திற்கும் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் தமிழ்மக்கள் இந்த நால்ரை ஆண்டு காலத்தில் மிகத் தெளிவாகக் கூறி வந்ததுடன் எமது கொள்கை மற்றும் அரசியல் உரிமை, சுயநிர்ணய உரிமை, மக்களின் அடிப்படை உரிமை பற்றியெல்லாம் தெளிவாக சர்வதேசத்திற்கு முன் வைத்துள்ளனர்.

ஆனால் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக உள்ள விடுதலைப்புலிகளைத் தடைசெய்துள்ளது மிகமோசமான புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவது மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைத்துள்ள செயலாகும்.

அண்மைக்காலமாக இலங்கை அரசு தமிழ் மக்களைப் படுகொலை செய்தும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியும் வரும் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்காத அல்லது அழுத்தம் கொடுக்காத சர்வதேச சமூகம் இன்று விடுதலைப்புலிகளை மாத்திரம் பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தி தடைசெய்துள்ளது தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள அடக்குமுறை சங்கிலியாகவே கருத வேண்டியுள்ளது.

எனவே இதுவரை காலமும் நம்பியிருந்த சர்வதேச சமூகத்தின் அரக்க முகம் இன்று வெளிப்பட்டுள்ளது. இதிலிருந்து தமிழ் மக்கள் ஒன்றை மாத்திரம் புரிந்து கொள்ள வேண்டும். எமது உரிமைகளை நாமே பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர இலங்கை அரசோ அன்றில் சர்வதேச சமுகமோ பெற்றுத்தரப்போவதில்லை.

எனவே எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் இறுதிக் கட்ட முடிவுகளை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இதற்காக தமிழ் மக்கள் அனைவரும் எமது தலைமையின் கரத்தைப் பலப்படுத்தி எமது உரிமைக் காகப் போராட வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இன்று ஒரு தகவல்

# அரசன்

அந்தக் காலத்தில் ஒருவன் கடல் வாணிபம் செய்வதற்காகப் போகிறான். கப்பல் உடைந்து கடலில் மூழ்கி விட்டது. அவனும் போய்விடுகின்றான். அவனுக்கு ஏகப்பட்ட சொத்து இருக்கிறது. வாரிசு இல்லை. முறைப்படி வாரிசு இல்லாத சொத்து அரசாங்கத்திற்குப் போய்ச்சேர வேண்டியதுதானே. அதனால் அந்த ராஜாங்கத்தில் இருந்த நிதி அமைச்சர் ராஜாவுக்கு ஒரு குறிப்பு அனுப்புகிறார்.

கடல் வாணிபம் செய்யப் போன ஒருவன் கப்பல் உடைந்து இறந்து போனதாலும் அவனுக்கு சந்ததி இல்லையென்பதாலும் அவனுடைய சொத்து முழுவதும் அரசாங்க கஜானாவைச் சேரும் என்ற குறிப்பை அனுப்பிவைத்தார் ராஜாவுக்கு. அந்த ராஜா யோசித்தார். அவ்வளவு செல்வத்தையும் உடனே அரசாங்கம் எடுக்கலாம் என்ற முடிவுக்கு வரவில்லை. அவசரப்படவில்லை நிதானமாகச் சிந்தித்தார்.

அந்த நபர் ஒரு பெரிய வியாபாரி என்றால் பல திருமணங்கள் செய்திருப்பானே... அப்படியிருந்தால் அவனுடைய மனைவிமாரில் யாராவது கர்ப்பமாக இருக்கிறார்களா என்று விசாரிக்க வேண்டும் என்றார். அரச அதிகாரிகள் விசாரித்தார்கள். ராஜா எதிர்பார்த்தது போலவே இறந்துபோன அந்த வியாபாரியின் ஒரு மனைவி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. உடனே ராஜா சொன்னார் "அந்த வியாபாரியின் சொத்து அரசாங்க கஜானாவுக்கு வரவேண்டியதில்லை. அந்த செல்வம் முழுவதும் கர்ப்பத்தில் இருக்கும் அந்தக் குழந்தையைத்தான் சேரும்" என்றார்.

இப்படித் தீர்ப்பு வழங்கிய அந்த ராஜா யார் தெரியுமா? துஷ்யந்தன். ஆமாம் காளிதாசனுடைய சாகுந்தலத்தில் வரும் ஒரு காட்சிதான் இது. காளிதாசனின் ரகுவம்சம் வரிசையாக சூரியவம்ச ராஜாக்களைப் பற்றிக் கூறும் காவியம். அதில் வரும் ரகு என்ற ராஜா ஒரு காரியம் செய்தார். அந்த ராஜா உள்நாடு, வெளிநாடெல்லாம் ஜெயித்து ஏகப்பட்ட செல்வங்களுடன் திரும்புகிறார். அந்த சொத்து முழுவதையும் என்ன செய்தார் தெரியுமா?

விஷ்வஜித் என்ற ஒரு யாகம் செய்து அத்தனை செல்வத்தையும் தானம் செய்து விடுகிறார். தட்சணையாகவும் கொடுத்தார். ஏற்கனவே இருந்த சொத்துக்களைக் கூட தானம் செய்து விடுகிறார்.

அந்தக் காலத்திலெல்லாம் ஒருவர் ராஜா ஆக வேண்டும் என்றால் அதற்கு முன்பு அதற்கான யோக்கியதைகளை சம்பாதிக்கவேண்டியது அவசியமாக இருந்தது. குருகுலவாசம் செய்யவேண்டும். சாஸ்திரங்களையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும். தர்மத்திலும் பண்பிலும் அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ராஜாவாகி வெளி விரோதிகளை ஜெயிப்பதற்கு முன்பு காமம், குரோதம் போன்ற ஆறு உள் விரோதிகளை ஜெயிக்கவேண்டும் என்பது சாஸ்திரம்.

ஒரு ராஜா மக்களிடம் வரி வசூலிப்பது எப்படி என்பதைப் பற்றிக் கூட அப்போது சொல்லியிருக்கிறார்கள். ஒரு வண்டு எப்படி புஷ்பத்திற்கு வலி தெரியாமல் தேனை எடுத்துக்கொள்கிறதோ அதுபோல்தான் ராஜா குடிமக்களுக்குக் கொஞ்சம் கூட சிரமம் தெரியாமல் அவர்களுடைய மலர்ச்சி குன்றாமல் வரி வசூலித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது சாஸ்திரம்.

இதையே இன்னொரு உவமையால் அழகாகச் சொல்கிறான் காளிதாசன் சூரியன் எப்படி பூமியிலிருந்து நீரை உறுஞ்சிவிட்டு அதன் பின்பு அதையே மழையாக பொழிகிறதோஅதுபோல் தான் அந்த ராஜா (திலீபன்) குடிமக்களிடமிருந்து வரி வசூலித்து அதன்பின் அதை அவர்களின் நலனுக்கே செலவிட்டான் என்கிறான். அதனால் ஒரு தேசத்திற்கு ராஜாவாக இருப்பதென்பது சாதாரண விடயமில்லை.

நமது காலத்துப் பிரஜைகளில் ஒருவர் மிகவும் சிரமப்பட்டு கடன் வாங்கி ஒரு கார் வாங்கினார். "என்ன இது ஆச்சரியமாக இருக்கிறது... ஏற்கனவே நீங்கள் வரி கட்டமுடியாமல் கஷ்டப்படுகிறீர்கள்... இந்த நிலையில் இது தேவையா?" என்று கேட்டார்கள். இதற்கு அவர் சொன்னார் "அப்படி இல்லை என்னிடம் மற்றவர்கள் வரி வசூலிக்க வரும்போது என்னால் வேகமாக ஓட முடியவில்லை- அதனால்தான் கார் வாங்கினேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்க விவசாய சங்கங்கள் அமைக்கப்படும்

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பிரதேசங்களிலும் விவசாய சங்கங்களை ஆரம்பித்து அதனூடாக விவசாயிகளது பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மஹிந்த சிந்தனையின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எடுக்கப்படுகின்ற பல நடவடிக்கைகளுள் இதுவும் ஒன்றாகும்.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பலவற்றுக்கு விவசாய சங்கங்களின் ஊடாக தீர்வினைப் பெற்றுக்கொடுக்க விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என விவசாய அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டி அபலதெனியவில் விவசாய சங்கத்திற்கான புதிய கட்டடம் ஒன்றினைத் திறந்து வைத்ததுடன் வரையறுக்கப்பட்ட அபலதெனிய விவசாய சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் பேசிய அமைச்சர், நெல், மரக்கறி, பழவகைகள் போன்ற பல்வேறு தத்தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல இடர்பாடுகளை விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர். இவற்றில் கவனம் செலுத்த வேண்டியது அமைச்சின் முதற்பணிகளில் ஒன்றாகும். நட்ட அபாயம் எதிர்நோக்கப்படின் உற்பத்தியில் நாட்டம் குறைந்து விடும். இதனால் விவசாய உற்பத்தி வீழ்ச்சி காணும்.

விவசாயிகள் தனித்து நின்று தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதைவிட விவசாய சங்கங்களை நிறுவி அதனூடாக விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடின் கூடிய நன்மையைப் பெறுவர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விவசாய சங்கங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று கூறினார். (க-9)

# சேவைக் காலத்தை கருத்தில் கொள்ளாது சகலருக்கும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வலது குறைந்த இராணுவ வீரர்களின் சேவைக் காலத்தை கருத்தில் கொள்ளாது சகலருக்கும் ஓய்வூதியத்தை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

தாமாகவே முன்வந்து இராணுவத்தில் இணைந்து யுத்தத்தின் போது உயிரிழந்த இராணுவ வீரர்களின் மனைவிமாருக்கும் மற்றும் அநாதைச் சிறுவர்களுக்கும் யுத்தத்தின் போது அங்கவீனமானவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் விசேட கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய ஏற்பாடுகளின் அடிப்படையில் விதவைகள் மீண்டும் திருமணம் செய்யாத சமயத்திலே இத்தகைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை இந்த விதவைகள் மீண்டும் திருமணம் செய்தாலும் சரி செய்யாது விட்டாலும் சரி அவர்கள் நஷ்டஈட்டுத் தொகையான 5 இலட்சம் ரூபாவைப் பெறத் தகுதியுடையவர்கள் என்றும் தெரிவித்தார். (க-9)

## தேசிய மொழிப்பயிற்சி நிலையம் அமைக்க சட்டமூலம் தயாரிப்பு

(கொழும்பு)

தேசிய மொழிப்பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்பு தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு இரு மொழிகளிலும் பயிற்சிகள் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த நிலையத்தை அமைப்பதற்கு 14 கோடி ரூபா செலவிடப்படுமென்று அமைச்சின் செயலாளர் மல்க்காற் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் சிங்கள மற்றும் தமிழ்மொழி பயிற்சித் திட்டத்தை அமைச்சு நடத்தவுள்ளது. (க-9)

## தாமதமின்றி கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

எத்தகைய தாமமும் இன்றி கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கான சகல விதமான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பி.வி. அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தூர இடங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தத்தமது பிரதேச செயலக அலுவலகம் ஊடாக இரண்டு வார காலத்தில் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியுமென்று தெரிவித்தார்.

அத்துடன் மத வழிபாட்டு தலங்கள் ஊடாகவும் கடவுச்சீட்டு விண்ணப்பப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (க-9)

## தவறான தகவல்களை பரப்பும் ஊடகங்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை குறித்து சில ஊடகங்கள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக ஊடக அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், ஊடக தொழிற்சங்க சம்மேளனம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் ஊடக வியலாளர் ஒன்றியம் என்பன விடுதலைப் புலிகளின் அரசியல் துணைப் பொறுப்பாளருடன் அண்மையில் பேச்சுவார்த்தை ஒன்றில் பங்கேற்றனர்.

அரச இலத்திரனியல் ஊடகங்களில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட இணையத்தள செய்தி குறித்தே தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் சமாதான நடவடிக்கைகள் குறித்து பேசவில்லை எனவும் சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார். (க-9)

## ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையால் கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் தேங்கியுள்ள 4 இலட்சம் தபால்கள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள மத்திய தபால் விநியோக நிலையத்தில் தபால் தெரிவு ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதினால் 4 இலட்சம் வரையான கடிதங்கள் தேங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிலையில் சேவையாற்றும் புதிய ஊழியர்களை முகாமைத்துவ சேவையில் இணைக்கக்கோரி இரு தொழிற்சங்கங்களினால் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து தபால்மா அதிபர் சேனதீரவுடன் இந்த சங்கங்கள் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தையையும் நடத்தியுள்ளன. (க-9)

# இலங்கை இந்துமாமன்றம் நடத்திய பேச்சு, கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழாவை முன்னிட்டு அண்மையில் நாடளாவிய ரீதியில் நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்டப் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### பேச்சுப் போட்டி

தேசிய மட்டப் பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் கிளிநொச்சி இராமநாதபுர மகாவித்தியாலய மாணவன் ஜெயஜெயமாருதியும் மத்திய பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் வி.நரேஸ்குமாரும் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

### கட்டுரைப் போட்டி

கட்டுரைப்போட்டியில் கீழ்ப்பிரிவில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி சி.நிருஷாந்தி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

மத்தியபிரிவில் யாழ். இந்துக்கல்லூரி மாணவன்யோகேஸ்வரன் அஜித் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்பிரிவில் யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவி நிலானி செல்லத்துரை இரண்டாம் இடத்தையும் யாழ். வடமராட்சி இந்துக் கல்லூரி மாணவி அபிராமி நல்லதம்பி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேற்படி தேசிய மட்டப் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கமும் சான்றிதழ்களும் வழங்கப் படும் என்றும் பரிசுகள் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் எனவும் இந்துமாமன்ற பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (கு)

# சுவாமி விவேகானந்தர்

## ஆத்மாவின் அழைப்பு

சிறுவன் நரேந்திரநாதனின் மீது வாலிபத்தின் சாயை வீசத் தொடங்கியபோது அவனது மனோபாவங்களும் மாறுதல் கண்டன. கடினமான விஷயங்களை விழுந்து விழுந்து படித்தான் அவன். அறி



வாராய்ச்சியில் அதிகமாக ஈடுபட்டான். இலக்கியத்திலும் சரித்திரத்திலும் தனியானதோர் ஆர்வம் காட்டினான். செய்தித்தாள்களை தவறாமல் படித்தான். பொதுக்கூட்டங்களுக்குச்சென்று வரலானான். தான் காண்பதையும் கேட்பதையும் குறித்துப் புதுப் புதுக் கோணங்களில் விமர்சிக்கும் திறனால் தன் சகாக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். வாதிக்கும் சாதுரியம் அப்போதே நரேனிடம் ஓங்கி விட்டது.

* * *

1877ஆம் ஆண்டு, அதாவது நரேந்திரனுக்குப் பதினைந்து வயது நடக்கும்போது, அவனுக்கு ஓர் ஆனந்தாதிசய அனுபவம் கிட்டியது.

நரேந்திரன் உயர்தரப் பள்ளியில் மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது விசுவநாத தத்தர் மத்தியப் பிரதேசத்திலுள்ள ராய்ப்பூரில் சில ஆண்டுகள் குடிபெயர்ந்திருக்க நேர்ந்தது. தத்தர் முதலில் ராய்ப்பூர் சென்று விட்டார். பிறகு குடும்பத்தினருடன் நரேனும் கல்கத்தாவை விட்டுக் கிளம்பினான்.

அந்த நாளில் நாகபுரிக்கு அப்பால் ரயில் கிடையாது. எனவே அலகாபாத், ஜபல்பூர் வழியாகக் கட்டை வண்டிகளிலேயே நீண்ட பயணம் நடைபெற்றது. வழி நெடுக எத்தனையோ வன வனாந்தரங்கள் ஜனசஞ்சாரமற்ற பல பாட்டைகள்! ஆங்காங்கே கிராமங்கள் வயல்கள், நீர்நிலைகள் ஆடிஆடிக் கொண்டு மாட்டு வண்டியில் சென்ற நரேந்திரன் மாறி மாறி வரும் இயற்கைக் காட்சிகளையும், மக்களையும் ரசித்துக்கொண்டே சென்றான். அந்த இயற்கை எழிலைக் காணும் போதுதான் அவனுக்கு அற்புத அனுபவம் கைகூடியது.

அன்று என்னவோ வானமே கழுவி விட்டது போல் 'மொரமொரக்கப்' பிரகாசித்துக் கொண்டிருந்தது. காற்றிலும் ஒரு அதிசயமான தெளிவு இருந்தது அந்த ஆத்மாவின் அழைப்பு. வானத்தைப் பின்னணியாகக் கொண்டு, காற்றில் மர்ம ஒலி எழுப்பிய மரங்களின் இலைகளிலும், கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மலர்களிலும் என்றுமில்லாத ஒரு தூய்மையும் பசுமை ஒளியும் ததும்பின. அவற்றில் கூவும் பட்சியினங்கள் தங்கள் கீதத்தின் எதிரொலி அலைகளை நரேந்திரனின் உள்ளத்தில் எழுப்பி நிரப்பின. இத்தனை அழகுகளுக்கும் எல்லைகட்டி வரையறை செய்தன சாலையின் இருபுறத்தையும் நெருக்கிய விந்திய பர்வதத்தின் உன்னதமான தொடர்கள், புள்ளினங்களின் நூறு நூறு சப்த ஜாலங்கள் அவற்றின் இறகில் நூறு நூறு வண்ண ஜாலங்கள், அதற்கு மிஞ்சி மரங்களிலும் கொடிகளிலும் பூத்துக் குலுங்கிய புஷ்பங்கள் எத்தனை எத்தனையோ நிறபேதங்கள் அவற்றைச் சுற்றி 'ஜீவ்' என்று ரீங்காரமிடும் தேனீக்களின் இசையில் எத்தனை எத்தனையோ ஸ்வர பேதங்கள் பரமரசிகனான நரேந்திரனும் ஒரு தேனீயாகி இந்த இயற்கை எழிலில் ஊறும் தேனை மாந்திக்

### அத்தியாயம் - 07

கொண்டிருந்தான்.

ஆகா! இத்தனை சௌந்திரியங்களுக்கும் சிகரம் வைத்தது போல அதோ அந்த மலைச் சிகரங்களிடையே அதென்ன அற்புதக் காட்சி! ஒரே சிகரம் பிளந்து இரு சிகரங்களாக நிற்பது போன்ற அந்த இடைவெளியில் எத்தனை பெரிய தேன்கூடு! ஆமாம். எத்தனை பெரியது! அவ்வளவு உயரத்தில் இவ்வளவு பெரிய தேன் தேக்கத்தை எழுப்ப எத்தனை காலம் பிடித்திருக்கும்! இவ்வளவு பெரிய கூட்டை நிர்மானிக்க எத்தனை ஆயிரம், பதினாயிரம் தேனீக்கள் தேவையாயிருக்கும்! இசைச் சுவையும் இன்சுவையுமே வாழ்க்கையான அந்திக்கலை ஐந்துக்கள் அவ்வளவும் இசைந்து எழுப்பிய அற்புதம் அல்லவா அதோ அந்த மலைச் சிகரத்தில் தொங்கும் பிரம்மாண்டமான தேன்கூடு!

மேலே நிர்மலமான விரிந்து பரந்த ஆகாசம்! அந்த நிர்மலத்தோடு பிரிக்க முடியாத நீலமயமான உன்னத மலை முகடுகள்! மலை முகட்டில் சின்னஞ் சிறிய ஜீவராசிகளின் மகோன்னத மான ஒத்துழைப்பு நிறுவிய தனித்தடாகம்? இந்த விரிந்து பரந்த ஆகாயம் எங்கிருந்து வந்தது? அதன் நிர்மலம் எங்கிருந்து வந்தது? இந்த உன்னதமானமலைத்தொடர்கள் எங்கிருந்து வந்தன? அவற்றின் நிர்மலம் எங்கிருந்து வந்தது? லட்சோப லட்சமான அந்தச் சின்னஞ்சிறு தேனீக்கள் எங்கிருந்து வந்தன? அவற்றின் மகோன்னதமான, நிர்மலமான ஒத்துழைப்பு எங்கிருந்து வந்தது?

எங்கிருந்து, எங்கேயிருந்து?

எங்கிருந்து இந்த சுந்தரமயமான பெருமைகள் உதித்தனவோ அங்கேயே ஆழ்ந்து அமிழ்ந்து விட்டான் நரேந்திரன், மலரின் மென்மையும், மணமும், இனிமையும், மரங்களின் பசுமையும் கொடிகளின் நளினமும், வண்டினங்களின் அன்பான உழைப்பும், பட்சிகளின் தேன் ஒலியும், மலைகளின் மௌனமும், வானத்தின் காம்பீரமும் எந்த ஒரு மகாமதியின் கற்பனையில் உதித்தனவோ அந்த மகாமதியிலேயே மூழ்கி விட்டான். நரேன் சிறிய ஒலியைப் பேரொலி அமுக் குவது போல், சிறிய ஒளியைப் பேரொலிமங்கச் செய்வது போல நரேந்திரன் கண்ட ஒலிமயமான, அதிசயப் பிரபஞ்சத்தை அதிசய மற்றதாக்கும் ஆதார ஒலியில், ஆதார ஒளியில் அவன் மூழ்கிக் கொண்டிருந்தான்!

நரேந்தின் எவ்வளவுகாலம் சுயநினைவிழந்து கட்டை வண்டியில் கிடந்தானென்று நாம் சொல்ல முடியாது, அனுபவம் செறிந்த அகவாழ்வுக்குக் கடிகாரத்தைக் கொண்டு காலம் கணிக்க முடியுமா, என்ன? இதுவே நரேந்திரனின் முதலாவது பரவச நிலை!

* * *

சிறுவயதிலிருந்தே நரேந்திரனுக்கு இன்னொரு விசித்திர அனுபவமும் ஏற்படுவதுண்டு. இதைப் பற்றிப் பிற்பாடு சுவாமி விவேகானந்தர் கூறியதையே இங்கு பார்ப்போம்:

''என்னுடைய பாலியத்திலிருந்து நான் ஏதேனும் ஒரு பொருள், மனிதன் அல்லது இடத்துடன் தொடர்பு கொள்ளும் போது அந்தப் பொருளையோ, மனிதனையோ, இடத்தையோ முன்பே அறிந்திருந்தது போலச் சில சமயங்களில் தோன்றும். எப்போது அவ்வாறு தொடர்பு கொண்டிருந்தோம் என்று எவ்வளவு சிந்தித்தாலும் விடை கிடைக்காது. ஆனால் அது முன்பே பழக்கமானது என்ற எண்ணம் மட்டும் நீங்காமல் நிற்கும்.

ஓர் உதாரணம், பாருங்கள், ஒருநாள் குறிப்பிட்டதோர் இடத்தில் நண்பர்களுடன் பல விஷயங்களை விவாதித்துக்கொண்டிருந்தேன். யாரோ என்னவோ சொன்னார்கள். உடனே எனக்குத் திடீரென ஒரு ஞாபகம் எழுந்தது. முன் எப்போதோ இதே இடத்தில் இதே நண்பர்களுடன் இதே விஷயங்களைப் பற்றி நான் விவாதித்திருக்கிறேன். இன்று போலவே அன்றும் விவாதத்தின் ஒவ்வொரு படியும் அமைந்திருக்கிறது --- இப்படி ஓர் எண்ணம் எழுந்தது.

புனர்ஜன்ம நியதியினால் தான் இவ்வாறு தோன்றுகிறது என்று பிற்காலத்தில் எனக்குத் தோன்றியது. எனினும் இவ்வாறு தீர்மானமாக முடிவு கட்டுவது இவ் விஷயத்தில்பகுத்தறிவுக்குப்பொருந்திய விளக்கமாகாது என்றும் கருதினேன் எப்படியோ, நான் பிறப்பதற்கும் முன்பே, இந்த ஜன்மத்தில் தொடர்பு கொள்ளப் போகும் பொருள்களையும், மனிதர்களையும் கண்டிருக்கிறேன் என்பதே என் இப்போதைய நம்பிக்கை. அந்தக் காட்சியின் நினைவே என் வாழ்வுமுழுவதும்அவ்வப்போது

**ஆன்மீகப் பாதை**
**ரா.கணபதி**

என்முன் வந்து நிற்கிறது.

ராய்ப்பூரில் நரேந்திரன் படிக்கக்கூடிய பள்ளி ஏதுமில்லை. இதனாலும் அவனுக்கு ஒரு இலாபம் கிடைத்தது. உயர்மதி படைத்த விசுவநாத தத்தருடன் நெருங்கிப் பழகும் பேறுதான் அது. சுறு சுறுப்புடனும், தீர்க்கமாகவும் சிந்தித்து விடைகாண வேண்டிய விஷயங்களைத் தனயனுடன் பரிமாறிக் கொள்வார் தந்தை, பிள்ளையின் மீது எந்தக் கருத்தையும் திணிக்காமல் அவனுக்குப் பூரண மான சிந்தனா சுதந்திரம் அளித்திருந்தார் விசுவநாதர்.

(தொடரும்)

# அரசியல் யாப்பிற்கு முரணாக நியமனங்களை வழங்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ;

## பிரான்ஸி பரன்ஸிஇன்ரநஷனல் அமைப்பு குற்றச்சாட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து அரசியல் யாப்பிற்கு முரண்பட்ட விதத்தில் நியமானங்களை மேற்கொண்டு வருவதாக பிரான்ஸ் பரன்ஸி இன்ர நஷனல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அண்மையில் உயர்நீதி மன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் வெற்றிடங்களுக்கு ஜனாதிபதி நீதிபதிகளாக சிலரை நியமித்திருந்தார்.

இவை அரசியல் யாப்பின் 17 ஆவது திருத்தத்தை புறக்கணிக்கும் செயற்பாடு என்று பிரான்ஸி பரன்ஸி இன்ர நஷனல் அமைப்பு குறிப் பிட்டுள்ளது. அத்துடன்இந்த செயற்பாடானது சுதந்திரத்தையும் இறைமையையும் சட்ட ஒழுங்கையும் பாதிக்குமென்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அரசியல்வாதிகள் பொதுமக்களின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும் அவர்கள் குடியரசின் உரிமையாளர்கள் இல்லை என்று பிரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் அது மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்யும் என்பதுடன் ஜனநாயக மரபுகளுக்கு மீறும் செயல்களுக்கு வழி வகுத்து விடுமென்றும் பிரான்ஸ் பரன்ஸி இன்ர நஷனல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (க-9)

# போட்டிப் பரீட்சை

மக்கள் வங்கிகளில் கடமையாற்றுவதற்கு உதவியாளர்களை பயிலுநர்களாக நியமிப்பதற்கான போட்டி பரீட்சை நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. என்றும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்திலும் இந்த பரீட்சை நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# சொந்த இடங்களுக்கு திரும்ப திருமலை அகதிகள் மறுப்பு

திருகோணமலையில் இருந்து பாதுகாப்புக்காக இந்தியாவுக்குச் செல்வதற்காக மன்னார் சென்றுள்ள தமிழ் அகதிகளை மன்னார் மாவட்டத்திலேயே தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவிக்கின்றார்.

முன்னதாக இந்த அகதிகளை திருகோணமலையில் உள்ள அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாண ஆளுநர் மன்னார் மாவட்ட அரச செயலக அதிகாரிகளுக்கு மன்னார் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி ஊடாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் திருகோணமலையில் உள்ள தமது சொந்த இடங்களில் தமது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி, தமது பாதுகாப்பு சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்டால் ஒழிய தம்மால் அங்கு திரும்பிச்செல்ல முடியாது என இடம் பெயர்ந்த மக்கள் உறுதியாக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

பேசாலை சென்மேரிஸ் மகா வித்தியாலயம், தலைமன்னார் சென்லோரன்ஸ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் திருகோணமலையைச் சேர்ந்த சுமார் 600 அகதிகள் தங்கவைக்கப்பட்டிருப்பதாக மன்னார் மாவட்ட அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்குத் தொண்டர் நிறுவனங்களின் உதவியோடு சமைத்த உணவு நிவாரணமாக வழங்கப் படுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (க)


# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரினால் மாவட்டச் செயலகத்தில் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மான வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கேள்விதாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி பற்றிய முழு விபரங்கள் அடங்கிய ஆவணங்களை இச் செயலகத்தின் களஞ்சிய நலன் புரிக்கிளையில் அலுவலக நேரங்களில் 01.06.2006 இருந்து பெற்றுக்கொள்ளலாம் கேள்விகளுக்கான முடிவுத்திகதி 23.06.2006 மாலை 2.00மணியாகும். அன்று மாலை 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் 22.06.2006 மாலை 3 மணிவரை வழங்கப்படும். கேள்வி பற்றிய சகல விபரங்களையும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும்போது பெற்றுக்கொள்ளலாம்.

| இல | ஆகக்குறைந்த தரம் (ICTAD) | வேலை விபரம் | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை (RS) | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை (RS) |
|---|---|---|---|---|
| | M6 | அரச அதிபரின் வாசஸ்தலம் இருமாடிக்கட்டம் அமைத்தல் அமைத்தல், யாழ்ப்பாணம் கச்சேரி Construction of Two Story Building (Residence) Old Park Kachcheri, Jaffna | 1000 | 50,000 |
| | M7 | மாநாட்டு மண்டபம் புதுப்பித்தல் யாழ்ப்பாணம் கச்சேரி Renovation of Conference Hall at Jaffna Kachcherei, Jaffna. | 1000 | 40,000 |

மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.
30.05.2006

க. கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
தலைவர்

(C/335)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 58



### தப்பி ஓட முயற்சி

ஜோகன்ஸ்பர்க் மைதானத்தில் மக்கள் வெள்ளம் கரை புரண்டோடிக்கொண்டிருந்தது. சுதந்திர கீதங்கள் எழுந்தன. மக்கள் ஆடிப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

27 வருடங்களுக்குப் பிறகு தனது வலதுகை முஷ்டியை உயர்த்தி வணக்கம் செலுத்தியவுடன் சுதந்திர ஆபிரிக்கா வாழ்க! மண்டேலா வாழ்க! தென்னாபிரிக்கக் காங்கிரஸ் வாழ்க! என்ற முழக்கங்கள் எழுந்தன.

மண்டேலா் மிக நிதானமாகப் பேசினார். நமது சுதந்திரப் போராட்டம் இன்னும் முழுமை பெறவில்லை. இன்னும் கடக்க வேண்டிய தூரம் இருக்கிறது. நான் ஒரு அதிசயப் பிறவி அல்ல . உங்களைப் போன்ற மனிதன்தான் .தொண்டன்தான். நமது தென்னாபிரிக்காவிலுள்ள சகல மக்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்படும். காப்பாற்றப்படும் என உறுதியளிக்கிறேன். முன்னூறாண்டுக் காயம் எளிதில் ஆறாது என்பதை உணர்வேன். ஆனால் நாம் மறக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

நிறம்,இனம் ஆகியவற்றின் பெயரால் இணைக்கப்பட்ட கொடுமைகளுக்கு முடிவு கட்டப்போகிறோம் . இது முடிந்தவுடன் நாம் பெரும்பான்மை எனக் கருதி பிற இன, நிற மக்களை நாம் கொடுமைப்படுத்தவும் ஒதுக்கவும் தொடங்கினால் நமக்கும் அவர்கட்கும் வேறுபாடு இல்லாமல் போய் விடும். நாம் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டவேண்டும் சகோதர இரத்தம் தென்னாபிரிக்காவில் இனி சிந்தக் கூடாது. எல்லோரும் கூடி சேர்ந்து உழைத்து வளமான, அமைதியான தென்னாபிரிக்காவைக் கட்டியமைப்போம் எனப் பேசினார்.

மண்டேலாவின் விடுதலையை வரவேற்று வாழ்த்தி உலகத் தலைவர்கள் அனுப்பிய கடிதங்களும் கட்சிகள், தலைவர்கள், மக்கள் எழுதிய கடிதங்களும் மலை போலக் குவிந்துவிட்டன. அதில் ஒரு கடிதத்தை எடுத்து மண்டேலா படித்தார். அது ஒரு வீட்டில் பணி புரியும் பெண் எழுதிய கடிதம்.

விடுதலையான உன்னைப் பார்க்க மைதானம் வந்திருந்தேன். மகிழ்ச்சி .முதலில் நன்றாகப் பேசினாய் . கடைசியில் செம போர் என்று எழுதி இருந்தது! இன நிறப் பகைமையை மறந்து சேர்ந்து என்ற வரிகளை மக்கள் வரவேற்கவில்லை. ஆக மிகக் கடினமான பயணப் பாதை இனித்தான் என்பதை மண்டேலா உணர்ந்தார். சூலு இன மக்களின் மன்னரும் இன்கதா கட்சியின் தலைவர் புத்தலேசியும் மண்டேலாவை வரவேற்க வந்திருந்தனர் . சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு புத்தலேசியைப் பிடிக்காது. இவர் இனவெறி கலக அரசியல்வாதி இருந்தாலும் வந்தவர்களுடன் சுமுகமாகப் பேசி அனுப்பி விட்டார் மண்டேலா. அன்றிரவு கூட்டம் முடிந்தது. வின்னி புதுப்பித்துக் கட்டியிருந்த வீட்டிற்கு மண்டேலாவும் வின்னியும் குழந்தைகளும் நள்ளிரவு போய்ச் சேர்ந்தனர். ஆனால் அங்கு வீட்டைச் சுற்றிலும் பல்லாயிரம் மக்கள் ஆடிக்கொண்டிருந்தனர். மண்டேலாவும் வின்னியும் சேர்ந்து ஆடினர், பாடினர். ஆனால் வீட்டிற்குள்ளும் ஒரே கூட்டம். அதிகாலை 4 மணிவரை அதே பாட்டு ஆட்டம்தான். மறுநாளும் நிறைய நிகழ்ச்சிகள் இருந்ததால் மண்டேலாவை தெருக் கடையிலிருந்த ஒரு நண்பர் வீட்டில் போய் சில மணி நேரமாவது தூங்க ஏற்பாடு செய்தார்கள். புது வீட்டில் தூக்கம் வரவில்லை. சிறையே அமைதியான நல்ல இடம் போல மண்டேலாவுக்குத் தோன்றியது.

1990இறுதியில் விடுதலையான மண்டேலா நேராக தான் பிறந்த டிரான்ஸ்கீயிலுள்ள குனு கிராமத்திற்குப் போய் தன் தாயின் கல்லறையில் மலர் வைத்து அஞ்சலி செலுத்த விரும்பினார்... சொந்த மண்ணில் தங்குகிறார் போல ஒரு வீடு கட்ட வேண்டும் என்றும் விரும்பினார். ஆனால் சொந்த உணர்வுகளையும் உறவுகளையும் தள்ளிவைத்து இயக்க வேலைகளில் ஈடுபட வேண்டிய கடமை தான் சுண்டி இழுத்தது. சுதந்திரப் போராட்ட காலத்தின் போது சுவட்டோ நகரத்தில் மாணவர்கள் எழுச்சியை ஒடுக்க இராணுவம் இழைத்த கொடுமைகள் இடிக்கப்பட்ட வீடுகளைப் போய்ப் பார்த்தார். போகும் வழியெல்லாம் வெள்ளையர் வாழும் பகுதிகள். மாளிகை நகரங்களாகக் காட்சிதர ஆபிரிக்க மக்கள் வாழ்ந்த பகுதிகள் 27 ஆண்டுகளுக்குப் பிறகும் குள்ளக்குடிசைகளாக ஏழ்மைக்கோலத்தில் தான் இருந்தன. மக்களும் அதே மங்கிய ஆடைகளில் பசி படர்ந்த முகங்களோடுதான் காட்சி தந்தனர். ஒரு புது நம்பிக்கை மட்டும் உயிரூட்டிக்கொண்டிருந்தது. சுவட்டோவில் சகலருக்கும் சம உரிமை என்பதை வலியுறுத்தியே மண்டேலா பேசினார் . கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் அதைப் பற்றிப் பரிசீலிப்பது ஏற்பது தெரிந்தது. இளைஞர்கள் எங்களுக்கு ஆயுதம் கொடுங்கள் புத்திமதி வேண்டாம் என்று எழுதிய பலகைகளுடன் சில இடங்களில் நின்றனர். அந்தப் பொறி கனன்று கொண்டுதான் இருந்தது. இந்த உணர்வுகளை மதித்த மண்டேலா ஆயுதமேந்திய போராட்ட முறையை ஒத்திவைத்திருக்கிறோமே ஒழிய கைவிடவில்லை என அறிவித்தார். இது வெள்ளையர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

மண்டேலாவுக்குப் பல நாடுகளிலிருந்து அழைப்பு வந்தது. முதலில் தங்களது விடுதலை இயக்கத்திற்கு உதவிய ஆபிரிக்க நாடுகளுக்குப் போகத்திட்டமிட்டார். எல்லா ஆபிரிக்க நாடுகளிலும் வரவேற்பு திருவிழாக்கோலமாக இருந்தது. நாட்டின் தலைவர்கள் வரவேற்றனர். நாடாளுமன்றங்களில் பேச அனுமதித்தனர். ஜாம்பியா நாட்டின் அதிபர் கென்னத் காண்டா மட்டும் மண்டேலாவிடம் ஆயுதமேந்திய போராட்ட முறையைக் கைவிடுவதாக பகிரங்கமாக அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார் . அதை ஏற்க மண்டேலா மறுத்துவிட்டார். இன்னும் அதற்குரிய பக்குவநிலை வரவில்லை எனக் கூறிவிட்டார்.

மண்டேலாவுடன் வின்னியும் இந்தப் பயணத்தின் போது சென்றார். எகிப்தின் தலைநகரமான கெய்ரோவில் ஒரு மன்றத்தில் வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இதில் கூட்டம் நெரிசலால் சிரமப்படும் என மண்டேலா சொல்லியும் எகிப்தின் காவல்துறை கேட்கவில்லை. மண்டேலா நுழைய முயன்ற போது கூட்டம் இடித்துத் தள்ளியதில் விழுந்துவிட்டார். வின்னி கூட்டத்திற்குள் தள்ளப்பட்டு மிதிக்கப்பட்டு தலைமுடி கலைந்து சட்டை கிழிந்து அரைமணி நேரத்திற்குப்பிறகு மீட்கப் பட்டு மேடைக்கு வந்தார். மண்டேலாவும் வின்னியும் ஏதும் பேசாமல் விடைபெற்றனர். இந்தப் பயணத்தின் போது மறக்கமுடியாத கசப்பான சம்பவமாக இது நிகழ்ந்தது. இது பற்றி எகிப்தின் அதிபர் மோஸ்னி முபாரக் ஒரு வார்த்தை கூடப் பேசாதது வியப்பைத் தந்தது.

இதர ஆபிரிக்க நாடுகள் அனைத்திலும் மக்கள் வெள்ளம் தான் பாட்டும் கூத்தும்தான்! இதன் பிறகு லண்டனுக்குப் பறந்தார். அங்கு உலகப் புகழ்பெற்ற கலைஞர்கள் இரவு பூராவும் மண்டேலாவுக்காகப் பாடிய போது இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். லண்டனில் மார்கரட் தாட்சர் வரவேற்றார் . ஆனால் கண்டிப்பான புத்திமதி சொன்னார் . அதிக நிகழ்ச்சிகள் உடம்பை பாதிக்கும் என்றார். தென்னாபிரிக்காவுக்கெதிரான பொருளாதார முற்றுகையைத் தளர்த்தப் போவதாகவும் கூறினார் . தேர்ந்து எடுக்கப்பட்ட அரசு வரும் வரை அந்த நடவடிக்கையை நிறுத்தி வைக்க மண்டேலா வேண்டியதை நிராகரித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறு விதமாக பழகினார்கள், பேசினார்கள்.

(தொடரும்)

# ஓமந்தை சோதனைச் சாவடியில் 40 பாரவூர்திகள் தடுத்துவைப்பு?

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான சீமெந்து மற்றும் இரும்புக்கம்பிகள் போன்ற பொருட்களை ஏற்றி வந்த 40க்கும் மேற்பட்ட பாரவூர்திகள் ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். அரசாங்க அதிபரின் அனுமதியுடனேயே இந்தப் பொருட்கள் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்படுவதாகவும் அதற்கான அனுமதி ஆவணங்களை காண்பித்த போதும் லொறிகளை யாழ். செல்ல அனுமதிக்க படையினர் மறுப்பு தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. கடந்த புதன்கிழமை முதல் இந்த லொறிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த லொறிகளை விடுவிப்பதற்கான முயற்சியில் யாழ். அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார் என்றும் இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கும் அவர் கொண்டு வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வாகன உதிரிப்பாகங்கள் உட்பட பல பொருட்களை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு கொண்டு செல்ல படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# கிராமங்களில் பொருளாதார வீழ்ச்சியும் பாதுகாப்பற்ற நிலையும் உருவாகியுள்ளது

### மேல் மாகாண வடக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

கல்விமான்களின் சேவையை உரிய முறையில் பெற்றுக் கொள்ளும் செயற்திட்டமொன்று இன்மையால் கிராமிய பொருளாதாரம் மற்றும்பாதுகாப்பு உறுதிப்பாடற்ற நிலையில் காணப்படுவதாக மேல் மாகாண வடக்கு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் மக்கள் பாதுகாப்புக்குழுக்களை அமைப்பதற்காக அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மதத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், அரச திணைக்களங்களில் தொழில் புரிவோர் மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்புரிவோர் ஆகியோரை உள்ளடக்கிய கிராமத்தையே சக்தி வாய்ந்த கிராமம் என்று கூறலாம்.

அவர்களின் சேவையை கிராமத்தை கட்டியெழுப்புவதற்கு ஏற்ற வகையில் எம்மால் இது வரை பெறமுடியாது உள்ளது எனக் குறிப்பிட்ட அவர், இதனாலேயே கிராமங்களில் பொருளாதாரத்தில் வீழ்ச்சியும் பாதுகாப்பில் ஸ்திரமற்ற ஒரு நிலையும் தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டார். (க)

# சிவராமின் கொலை வழக்கு; சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற குற்றப்புலனாய்வு பிரிவினர் முடிவு

(கொழும்பு)

சர்வதேச ஊடகவியலாளர் சிவராமின் கொலை வழக்கு தொடர்பிலான விசாரணைகளுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

கடுவெல நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சிவராம் தொடர்பான வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபரின் ஆலோசனையைப்பெறுவதற்கு அனுமதியைப் பெற்றனர். இதனையடுத்து எதிர்வரும் 13ஆம் திகதி வரை விசாரணையை ஒத்தி வைத்த நீதவான் அன்றைய தினம் சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, கொலை வழக்கின் சந்தேக நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (க-9)

## தரமான பருப்பை பெறலாம்

தென்மராட்சியில் சமுர்த்தி நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட பருப்பு தரமற்றதென முறையிடப்பட்டதை அடுத்து அவற்றைத் திரும்ப கிளைகளில் ஒப்படைத்து தரமான பருப்பைப்பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க-29)

## சான்றிதழ்களை பெறலாம்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் நடாத்தப்பட்ட பனை தென்னை வள தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறியில் சித்தியடைந்த மாணவர்கள் தமக்குரிய சான்றிதழ்களை யாழ். பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பல்கலைக்கழக பதிவாளர் பி.கந்தசாமி தெரிவித்துள்ளார். (க-9)



சுன்னாகம் மயிலணி சிவன்கோவில் மஹா கும்பாபிஷேகம்
02.06.2006 வெள்ளி (2ஆம் நாள்)
மண்டலாபிஷேகம்

மயி லணிச்சிவன் கோயில் மகிழும்மே

சுவிளம் அறுகு வாவர
சுவன் மதி கொன்றைச் சடைத்துன்ற
தேவிய வளோடு முடனாய்த்
தொண்டரை ஆள் வமரீசன்
பாவிய குடவா யில்பரன்
காசியில் நாதர்ப் பெயர்பூண்டு
மாதவிப் பொழில்சுன் னைமயி
லணிச்சிவன் கோயில் மகிழ்வானே

சிவ: சண்முகவடிவேல்

## இந்தோனேஷியாவில் பூகம்பம்;

# உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 234 ஆக உயர்வு!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் ஜாவா தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. 6.3 ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கத்தில் யோகியா கர்த்தா உட்பட சில நகரங்கள் அடியோடு அழிந்துவிட்டன.

ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடு வாசல்களை இழந்தும் உறவினர்களை இழந்தும் தவிக்கிறார்கள்.

இந்தப் பூகம்பத்தில் உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை இப்போது 6 ஆயிரத்து 234 ஆக உயர்ந்துவிட்டது. காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் போதிய மருத்துவ சிகிச்சை இல்லாததால் உயிர் இழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து மருத்துவ குழுக்கள் இப்போது தான் பூகம்ப பகுதிகளை சென்றடைந்துள்ளனர். ஆஸ்பத்திரிகளும் சேதமடைந்ததால் கூடாரங்கள் அமைத்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இடிபாடுகளில் இனி யாரும் சிக்கியிருக்க வாய்ப்பு இல்லை என்ற நிலையில் தேடும் பணியை மீட்புப் படையினர் கைவிட்டனர். பூகம்பம் ஏற்பட்ட 5 நாட்களுக்குப் பிறகு இடிபாடுகளில் இருந்து ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. இதையடுத்து இடிபாடுகளை அகற்றியபோது ஒரு வயதுக் குழந்தை உயிருக்குப் போராடிக் கொண்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ரிகி என்ற அந்த ஆண் குழந்தை பூகம்பம் ஏற்பட்டபோது தனது தாயின் மடியில் இருந்து தவறி விழுந்தது. பலத்த காயத்துடன் மீட்கப்பட்ட அந்தக் குழந்தையை உடனடியாக ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அந்தக் குழந்தையின் பெற்றோர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (ஞ)




சுவிட்சர்லாந்து இத்தாலி இடையே உள்ள ஹைவேயில் பெரிய பாறை ஒன்று திடீரென விழுந்து கார்களை நசுக்கியது

# டாக்டர்களை வியக்கவைத்த 10 மாதக்குழந்தை

## முடங்கிய இருதயம் தானாக இயங்கியது

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் 10 மாதக் குழந்தையின் இருதயம், அடியோடு முடங்கிய நிலையில், திடீரென்று தானாக இயங்கத் துவங்கியது எப்படி என்று மருத்துவ நிபுணர்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டுள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் மெடிக்கல் சென்டரில் 10 மாதங்கள் முன்பு ட்டராப்பர் என்பவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இவற்றின் பெயர்கள் நேட், நிக் என்பது. இந்த இரட்டைக் குழந்தைகளுக்கு அபூர்வமான இருதய பாதிப்பு காணப்பட்டது. இரண்டு குழந்தைகளுக்கும் மார்பு விரிந்த நிலையில் காணப்பட்டது. அப்படி இருப்பதுடன் இருதய வால்வுகள் எப்போதோ ஒருமுறை விரிந்து இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும். இப்படி இருந்தால் பெரும் ஆபத்து என்பதால் புதிய மாற்று இருதயம் பொருத்தலாம் என்று திட்டமிட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் நிக் என்ற குழந்தை லொஸ் ஏஞ்சல்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அதற்கு மாற்று இருதயம் பொருத்தி வெற்றிகண்டனர் டாக்டர்கள். அதற்கு இருதயம் செயல்படவும் தொடங்கிய்து. அடுத்த குழந்தையான நேட்டுக்கு மாற்று இருதயம் கண்டுபிடிக்கப்பட்டு அதைப் பொருத்தி விட்டால் அதுவும் பிழைத்துவிடும் ஆபத்து இருக்காது என்று டாக்டர்கள் திட்டமிட்டிருந்தனர். அதற்கான மாற்று இருதயம் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இந்நிலையில் வழக்கம்போல குழந்தையை சோதிக்கும் டாக்டர்கள் ஒரு அதிசயத்தை அறிந்து அதிர்ந்து போயினர். அந்தக் குழந்தைக்கு திடீரென்று வழக்கம் போல மாமூலான நிலையில் இருதயம் இயங்கத் தொடங்கிவிட்டது. முன்பு போல எந்தப் பாதிப்பும் தென்படவில்லை.

உடனேடாக்டர்கள்குழுவிரிவாகசோதனை செய்தது. எப்படி மீண்டும் இருதயம் சீராக இயங்கத் துவங்கியது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது என்று டாக்டர்கள் ஆச்சரியப்படுகின்றனர். குழந்தையின் இருதயம், இப்போது பலமாக உள்ளது. இருதய வால்வுகள் முழுமையாக செயல்பட்டு வருகின்றன.

இரத்த ஓட்டத்தில் எந்தப் பாதிப்பும் தெரியவில்லை. ஆனால் இந்த அதிசயத்தின் பின்னணியில் என்ன நடந்தது என்பதே குழப்பமாகவுள்ளது. இது ஒரு மருத்துவ அபூர்வம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று மருத்துவ மைய இயக்குனர் அல்ஜோஸ் கூறினார்.

இத்தனைக்கும் இந்தக் குழந்தைக்கு அதன் சகோதரர் நிக் போல பெரிய அளவில் இருதய பாதிப்பு இல்லை என்றாலும், கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதன் நிலை அப்படியே மாற்றமில்லாமல் தான் இருந்தது.

மாற்று இருதயம் பொருத்தவேண்டிய கட்டாயம் இருந்து வந்தது. அப்படியிருக்க, எப்படி திடீர் என்று இருதயம் செயல்பட தொடங்கியது என்பது பற்றி இன்னமும் ஆராய்ந்து வருகிறோம். இது ஒரு மருத்துவ அதிசயம் தான் என்று டாக்டர்கள் வியப்பின் உச்சியில் உள்ளனர். (ஞ)

# அடம்பிடிக்கும் மாணவி

சிலி நாட்டின் சான்டியாகோ நகரில் கல்லூரி மாணவ மாணவிகள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம் நடத்தி வருகிறார்கள். வீதி ஒன்றில் உட்கார்ந்து சாலை மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கலைந்து செல்லும் படி பொலிஸார் மிரட்டியும் மாணவிகள் கலைந்துசெல்லவில்லை. மறியல் செய்த மாணவி களை பொலிஸார் அலாக்காக தூக்கி அப்புறப்படுத்தினார்கள்.



கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம்

இலவச பஸ் பாஸ், நுழைவுத் தேர்வு கட்டணம் ரத்து, கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் ஆகிய கோரிக்கைகளை வற்புறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. (ஞ)




கிழக்கு தைமூரில் பெரும் கலவரம் நடந்து வருவதால் அங்கு பாதுகாப்பு பணியில் ஆஸ்திரேலிய ராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்



இந்தோனேஷியாவில் யோக்யகார்தா நகரில் பூகம்பத்தால் சேதமடைந்து கிடக்கும் தன் வீட்டை சோகத்தடன் பார்க்கிறார் ஒரு பெண்

# டயானாவின் மரணம் தொடர்பாக புதிய தடயம் கிடைத்துள்ளதாம்

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசி டயானா, கார் விபத்தில் பலியான வழக்கில் புதிய தடயங்களும், புதிய சாட்சியங்களும் கிடைத்திருப்பதாக விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து இளவரசி டயானா தன் நண்பர் டோடி அல் பயத் உடன் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் திகதி காரில் பாரிஸ் நகருக்கு சென்றார். அப்போது ஏற்பட்ட விபத்தில் அவர்கள் 2 பேரும் பலியானார்கள். ஹென்றிபால் என்ற கார் டிரைவரும் இந்த விபத்தில் இறந்தார்.

இந்த வழக்கு பற்றி விசாரணை நடத்திய பிரான்ஸ் அதிகாரிகள் டிரைவர் ஹென்றி குடித்திருந்ததாலும், வேகமாக கார் ஓடியதாலுமே விபத்து நடந்தது என்று தெரிவித்தனர்.

ஆனால் இதை ஒரு சிலர் ஏற்கவில்லை. டோடியின் தந்தையும் லண்டன் நகர வர்த்தகப் பிரமுகருமான முகமது அல் பயத், பிரிட்டிஷ் இரகசியப் பொலிஸார் தான் என் மகனையும், டயானாவையும் கொலை செய்து விட்டனர் என்று குற்றஞ்சாட்டினார். ஏனெனில் என் மகனுடன் டயானாவுக்கு உறவு இருப்பதை அரச குடும்பத்தினர் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் லண்டன் மாநகரப் பொலிஸ் முன்னாள் தலைவரும் இந்த விபத்து பற்றிய விசாரணைக் குழுவின் தலைவருமான சர்ஜான் ஸ்டீவன்ஸ் இந்த வழக்குத் தொடர்பாக புதிதாக சில தடயங்களும், சாட்சியங்களும் கிடைத்துள்ளன என்று தெரிவித்திருக்கிறார்.

இதுபற்றி விளக்கம் எதுவும் கொடுக்க மறுத்துவிட்டார்.

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட டயானாவின் மெர்சிடஸ் காரை என் குழு அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் போட்டு ஆய்வுசெய்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஞ)

WORLD NEWS உலக தரிசனம்

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல்
-குறள்

வலம்புரி

# சட்டங்களை அமுல்படுத்த அரச அமைப்புகள் துணிய வேண்டும்

சட்டம் என்பது மக்களை ஒழுங்குபடுத்தும் கருவி. அதனை சரியான முறையில் அமுல்படுத்துகின்ற போது நாட்டில் கொலை , கொள்ளை , களவு போன்ற தீய செயல்களுக்கு இடம் இல்லாமல் போகும்.

எனினும், சட்டங்களை அமுல்படுத்தவேண்டியவர்கள் பாராமுகமாகவிருந்தால் நிலைமை படுமோசமாகவேயிருக்கும். இது விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் உயர் நீதிமன்றங்கள் வரை தமது கடமைகளைச் செய்வதில் அதி தீவிரம் காட்ட வேண்டும்.

அவ்வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை - தத்தம் பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டிய அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்நிற்பதைக் காண முடிகின்றது.

குறிப்பாக, யாழ்.குடாநாட்டில் வீதிகளில் திரிகின்ற கட்டாக்காலி ஆடு, மாடு மற்றும் நாய்களின் நடமாட்டம் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இதனால் ஏற்படும் விபத்துக்கள் மனித உயிர்களைக் காவு கொள்கின்றன.

கால்நடைகளை வளர்ப்பது தவறன்று. ஆனால் அவற்றைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றங்கள் கூறும் சட்டமாகும். அவ்வாறாயின், யாழ்.குடாநாட் டில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதற்கான காரணம் தான் என்ன?

உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அவை அறவிடப்படவேண்டிய வரிகளை அறவிடுகின்றன. அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இவ்வா று உள்ளூராட்சி சபைகள் தங்கு தடையின்றி இயங்கும்போது கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், எங்கோ , ஏதோ தவறு நடைபெறுகின்றது என்பது புலனாகின்றது அல்லவா?

கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும் என்ற சட்டம் பொதுமக்களின் காதுகளில் உரத்துக் கூறப்படுவதும் அதனை அவர்கள் நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில் கிடைக்கக் கூடிய தண்டனைகளை தெளிவுபடுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய கடமையாகும்.

இதனை முதலில் அமுல் செய்யும்போது சட்டத்தை மதிக்கும் மக்கள் அதற்குக் கட்டுப்படுவர். அதன் பின்னர் இருக்கக்கூடிய தவறுகளுக்குத் தண்டனையே வழியாகும்.

தண்டனைகளை விதிக்கும்போது இருக்கக் கூடிய மிகப் பெரிய விடயம் பக்கச் சார்பற்ற தீர்ப்பாகும். அதாவது செல்வாக்கு என்பதற்கு எவ்விடத்திலும் இடம் இல்லாது போகின்றபோது சட்டத்தை அமுல்படுத்துவதும் அதனைப் பின்பற்றச் செய்வது சுலபமாகிவிடும்.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ்.குடாநாடு யுத்தத்தால் மட்டும் அழிந்து போகவில்லை. மாறாக சட்டங்கள் , சம்பிரதாயங்கள் என்பவற்றை மதிக்கும் மன நிலையும் மாறி இன்று மிகப் பெரும் சீரழிவை நாம் சந்தித்து வருகின்றோம்.

சட்டங்களை மதிப்பதில் தவறுகள் ஏற்படுகின்ற போது குழப்பங்கள், ஆபத்துக்களும் நடக்கின்றன. மதில் கட்டுவது முதல் கால்நடைகள் வளர்ப்பது வரை இருக்கக் கூடிய சட்டங்களை , அது தொடர்பில் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆவணங்களைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளையும் பொதுமக்கள் செய்கின்ற செலவுகளையும் குறைத்துக் கொள்ள முடியும்.

# இனப்பிரச்சினை விடயத்தில் வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## என்கிறார் தம்பர அமில தேரர்

(கொழும்பு)

**இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் வெளிநாட்டு சக்திகள் தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்திருப்பதன் மூலமாக சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிட்டதென்று நினைத்துவிட முடியாது.**

**பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து காப்பாற்றுவோம் என்று தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் கலாநிதி தம்பர அமில தேரர் தெரிவித்தார்.**

தேசிய பிக்கு முன்னணி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய மகாபிக்கு மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாடு பயங்கரவாதத்தில் இருந்து தாய் நாட்டை பாதுகாப்பதற்காக மக்களை அணிதிரட்டுவோம் என்ற தொனிப் பொருளில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கம் இல்லை. அது ஒரு பயங்கரவாத இயக்கமாகும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைமூலமாக தெட்டத்தெளிவாகின்றது.

இந்த தடை மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்து விட்டதாக நினைத்துவிடக்கூடாது. விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு இன்னும் இருந்து வருகிறது. மறைமுகமாக சில நாடுகள் புலிகளுக்கு சில உதவி களை வழங்கிவருகின்றன.

நோர்வே, ஜேர்மன், தாய்லாந்து, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளை இவற்றில் சேர்த்துக்கொள்ளலாம். அதுமட்டுமன்றி அங்கு வாழும் புலம்பெயர்ந்த மக்கள் விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாக நிதியுதவி அளித்து வரு கிறார்கள்.

இந்த நிதி உதவிகளைக் கொண்டு விடுதலைப் புலிகளும் தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து போருக்கு தயாராகி வருகின்றார்கள் என்றார். (க)

# புடவை வியாபாரத்திற்காக இலங்கை சென்ற 300 பேரின் நிலை என்ன?-உறவினர் அச்சம்

(சென்னை)

புடவை வியாபாரத்திற்காக திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியிலிருந்து இலங்கைக்குச் சென்ற வியாபாரிகளில் சுமார் 300 பேரின் நிலை குறித்து தகவல் எதுவும் இல்லாதத்தால் சம்பந்தப்பட்டோரின் பெற்றோர் மிகுந்த கவலையுடனும் அச் சத்துடனும் காணப்படுகின்றனர்.

கடந்த 10ஆண்டுகளுக்கும் மேலாக 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் சின்னாளப்பட்டியிலிருந்து சேலைகள் மற்றும் பஞ்சாபிகளை வாங்கி தென்னாபிரிக்கா, மலேசியா , பர்மா, சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்குச் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

முன்னர் இலங்கையில் யுத்த சூழல் நிலை நிலவியதால் இலங்கைக்கு மேற்படி இளைஞர்கள் வியாபாரத்திற்கு செல்லாமல் இருந்தனர்.

இந்நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக இலங்கையில் யுத்த நிறுத்தம் நிலவியதால் மீண்டும் சின்னாளப்பட்டியில் இருந்து இலங்கைக்கு இளைஞர்கள் வியாபாரத்திற்காக சென்றனர்.

தற்போது இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு சென்ற சின்னாளப்பிட்டி வியாபாரிகள் இலங்கையில் சிக்கியுள்ளனர்.

கடந்த 10 நாட்களாக இலங்கையில் இருந்து ஒரு சில இளைஞர்கள் சின்னாளப்பட்டிக்கு வந்தபோதும் பெரும்பாலானோர் இன்னும் வந்துசேரவில்லை. இதனால் அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

இலங்கையில் அவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களிலும் லொச்ஜுகளிலும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாடும் சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.

இதனால் அவர்கள் கதி என்னவென்று தெரியவில்லை என்று சின்னாளப்பட்டியில் உள்ள அவர்களது பெற்றோர் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் இலங்கைக்குச் சென்ற சின்னாளப்பட்டி அஞ்சுகம் காலனியைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் இறந்து விட்டதாக இலங்கை அகதி ஒருவர் கூறியதாக சின்னாளப்பட்டியில் செய்தி பரவியுள்ளதால் அங்கு பெரும் பீதி உருவாகியுள்ளது. இதனால் இலங்கை சென்ற இளைஞர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மிகவும் கவலையாகவுள்ளதுடன் சம்பந்தப்பட்டோரிடமும் இது குறித்து முறையிட்டுள்ளனர். (க-9)

# கொழும்பு பங்குச் சந்தையில் திடீர் வீழ்ச்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்த செய்தி வெளிவந்ததையடுத்து கொழும்பு பங்குச் சந்தை திடீர் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை 20.64 புள்ளிகளாக இருந்த அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் நேற்று முன்தினம் 6. 87புள்ளிகளாக சடுதியாக வீழ்ச்சியடைந்தது. வங்கித்துறை முதலீடு நேற்று முன்தினம் பெரும் பின்னடைவைக் கண்டதாக கொழும்பு பங் குச் சந்தை வட்டாரங்கள் கூறின. (க)

# கோதுமை மாவின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கும்

கோதுமை மாவின் விலையை விரைவில் இரண்டு ரூபாவினால் அதிகரிக்க நேரிடும் என்று திறைசேரியின் செயலாளர் டாக்டர் பி.பி .ஜயசுந்தர தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நிதியமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, கோதுமை மாவிற்கான மானியத்தை நிறுத்தியுள்ளோம் . வருடாந்தம் கோதுமை மாவிற்காக 600 மில்லியன் ரூபாவினை அரசாங்கம் செலவழிக்கின்றது.

இந்நிலையில் கோதுமை மாவின் விலையை விரைவில் இரண்டு ரூபாவினால் அதிகரிப்பதற்கு நேரிடும் என்று நம்புகின்றோம். இருப்பினும் அரிசியின் விலையில் மாற்றம் ஏற்படாது. (க)

# வங்காள தேசத்தில் நிலநடுக்கம்

வங்காள தேசத்தின் தென் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் திடீரென்று நில நடுக்கம் ஏற்பட்டது.5.1ரிக்டர் அளவில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் 22 விநாடிகள் நீடித்தது. சிட்டகாங், பெனி மற்றும் சில மலைப்பகுதிகளில் இந்த நில நடுக்கம் உணரப்பட்டது. வீடுகள் அதிர்ந்தன.

ஆனாலும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. பீதியால் அந்தப் பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். சிட்டகாங் துறைமுகத்திலும் சுனாமி பேரலைகள் எழுந்ததாக தகவல் இல்லை. (க)


# இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள்

இளைஞர் படையணி பயிற்சி திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கில் மேலும் 15 நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தொழிற்பயிற்சி மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பின்தங்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக பல பாகங்களில் இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் இல்லை. இவ்வாறான இடங்களில் புதிய நிலையங்களை அமைப்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். சிறந்த கல்வியை பெற்றுக்கொடுக்கும் வகையில் ஒவ்வொரு நிலையத்திலும் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் அறிமுகம் செய்யப்படுமென்று தெரிவித்தார்.

இளைஞர் படையணி வேலைத் திட்டத்தின் முதற்கட்ட பயிற்சிகளுக்கு தகுதி பெற்ற உயர்கல்வி வாய்ப்புக்களை இழந்த இளைஞர், யுவதிகளை இலக்காகக் கொண்டு இப்பயிற்சி நிலை யங்கள் அமைக்கப்படவுள்ளன. அவர்களுக்கு பயிற்சி வழங்க பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (க-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இறைவனின் சங்கல்பமே உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் அவருடைய சங்கல்பம் இவ்வளவுதான் என்று வர்ணிக்கும் சொற்களில் அடங்காமல் கடந்து விளங்குகிறது.

சுவாமி விவேகானந்தர்

## சுயேச்சைக்குழு தலைவரை காணவில்லை என முறையீடு

கொழும்பு மாநகர சபைத்தேர்தலில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு 3 இன் தலைவர் எஸ்.இராஜேந்திரன் நேற்று முன்தினமிரவு முதல் காணவில்லையென கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரின் மனைவி இந்த முறைப்பாட்டை கொட்டாஞ்சேனை பொலிஸ்நிலையத்தில் செய்துள்ளதாக அந்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு வீட்டுக்கு வந்த ஒருவர் அவரை அழைத்துச்சென்றதாகவும் இதுவரை அவர் வீடுதிரும்பவில்லையெனவும் அவரது மனைவி பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். (ச-5)

## பரு.மின்சார...

சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

திருத்தும் பணியை அவர் மேற்கொண்ட போது அவரை மின்சாரம் தாக்கியுள்ளது. இச் சம்பவத்தில் 2-ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த தேவசகாயம் அன்னராசசிங்கம் (வயது 49) என்பவரே உயிரிழுந்தவராவார்.

மின்சாரம் தாக்கி மின்கம்பத்தில் உயிரிழுந்த நிலையில் இருந்த அவரது சடலத்தை சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்ட பருத்தித்துறை பதில் நீதிவான் தங்கராசா பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறவுள்ளது. (ச-52)

## புலிகளுடன் பேசுவது குறித்து...

நடை முறைப்படுத்துகிறது என்று தெரிவித்த அவர் ,பிரபாகரனின் சட்டத்திற்கு அமைவாக ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் செயற்பட முடியாது என்று கூறினார்.

உலகம் முழுவதும் உள்ள ஊடகவியலாளர்கள் கொழும்பில் கூடியிருந்தவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் குறித்து ஜனாதிபதி தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைதுசெய்து அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவரும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இதேவேளை அரசியல் அமைப்புச் சபை எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை நாடாளுமன்றமே தீர்த்துக்கொள்ளவேண்டும். நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளில் தாம் தலையிடப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற சர்வ கட்சி மாநாட்டிற்கு சமூகம் அளிக்கப்போவதாக ஜே.வி.பி.அறிவித்துள்ளது. முன்னர் சர்வகட்சி மாநாட்டில் தமக்கு பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அறிவித்திருந்தது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்த அழைப்பில் 'பிரிக்க முடியாத நாட்டிற்குள் அதிகாரப் பரவலாக்கல்' என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனால் பிரிக்க முடியாத நாட்டிற்குள் அதிகார பரவலாக்கல் என்பது சமஷ்டித்தீர்வையே குறித்து நிற்கிறது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இதற்கு மகிந்த சிந்தனையில் குறிப்பிட்ட ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற கொள்கையை மறுக்கும் செயற்பாடாகும் என ஜே.வி.பி.சுட்டிக்காட்டியது.

ஜே.வி.பியின் இந்த கருத்தையடுத்து ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவுடன் தொலைபேசியில் பேசி இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

இதன்போது இணங்கிக்கொள்ளப்பட்டதன்படி 'பிரச்சினைக்கு இறுதித்தீர்வு என்று பொது உடன்பாடு குறித்து சர்வகட்சி மாநாடு' என்ற தலைப்பில் இன்றைய சர்வகட்சி மாநாடு நடத்தப்படவேண்டுமென் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

இந்த இணக்கப்பாட்டினால் இந்தத்தலைப்பிலேயே சர்வகட்சி மாநாட்டினை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. (க-5,9)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள்....

வவுனியா சென்றபோதே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளனர் என்று ஈ.பி.டி.பி. யினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரும் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சியினரின் அலுவலகத்தின் மீது நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய கைக் குண்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புத் தேசியவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-9)

## வாக்காளர் அட்டை திருத்தும் பணி நேற்று முதல் ஆரம்பமானது

(கொழும்பு)

வருடாந்த வாக்காளர் அட்டை திருத்தப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கிராமசேவையாளர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களை சேகரித்துவருவதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயறொன்றைச் சேர்த்துக்கொள்வதற்கோ அல்லது பெயரை நீக்குவத்றகோ மாவட்ட தேர்தல் செயலகத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பிரஜாவுரிமை மற்றும் நிரந்தர வசிப்பிடம் என்பனவே இந்த வாக்காளர் அட்டை திருத்தப்பணிகளில் முக்கிய கவனமெடுக்கப்படுமெனவும் தேர்தல் செயலகம் தெரிவித்தது. (ச-5)

## புலிகளுடன் தொடர்பைப் பேணுவதில்...

நேற்றைய சந்திப்பின் நிறைவில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர், ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நேர்காணல் பின்வருமாறு,

*கேள்வி:-* இந்த சந்திப்பு தொடர்பாக?

*பதில்:-* கண்காணிப்புக்குழு தலைவர் கடந்த மூன்று தினங்களாக இங்கு தங்கியிருந்து நிலைமைகளை பார்வையிட்டார். எமது தளபதிகள், மக்களை சந்தித்து பேசியிருக்கின்றார். இன்று அவர் எம்மை சந்தித்தார். யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேசியிருக்கின்றோம்.

ஐரோப்பிய ஒன்றிய தடை வந்ததன் பின்னர் சமாதான முன்னனெடுப்புக்கள், கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கவேண்டிய தீர்மானங்கள் தொடர்பாக இன்னும் ஓரிரு தினங்களில் தலைமைப்பீடம் தீவிரமாக பரிசீலிக்க இருக்கின்றது. அதன்பின்பு கண்காணிப்புக் குழுவினரோடும் அனுசரணையாளர்களோடும் தொடர்பு கொள்வோம் என்று அவர்களிடம் கூறியிருக்கின்றோம்.

*கேள்வி:-* நோர்வேக்கு செல்லவிருக்கின்றீர்களா,?

*பதில்:-* நோர்வே 'யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவும் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேசுவதற்கு அழைத்திருக்கின்றது. இவ்வழைப்பை எமது தலைமைப்பீடம் சாதகமாக பரிசீலிக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு பின்னர் எமது தலைமைப்பீடம் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்கவிருக்கின்றது, எடுத்திருக்கின்றது என்பதை எடுத்துச் செல்வதாகவே இந்த ஒஸ்லோ பயணம் அமையவுள்ளது.

*கேள்வி:* ஒஸ்லோவில் நடைபெறவுள்ள சந்திப்புக்கு நோர்வே இலங்கை அரசாங்கத்தையும் அழைத்திருக்கின்றது. எனவே, இச்சந்திப்பானது இருதரப்பையும் ஒன்றாக சந்தித்து பேசவுள்ளதா அல்லது தனித்தனியாக பேசவுள்ளதா?

*பதில்:* இது பேச்சுவார்த்தை அல்ல. இருதரப்பும் சந்தித்து பேசுவதற்கு ஒஸ்லோவுக்கு செல்லவில்லை. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பு என்ற வகையில் இருதரப்பையும் நோர்வே அரசு அழைத்திருக்கின்றது. கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளோடு பேசுவதற்கும், முக்கியமாக அனுசரணையாளர்கள் என்ற ரீதியில் ஐரோப்பிய ஒன்றிய தடைக்கு பின்னால் எழுந்திருக்கின்ற நெருக்கடியான நிலைமைகள் தொடர்பாக இனி முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எமது தலைமைப்பீடத்தின் தீர்க்கமான சில நிலைப்பாடுகளையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கும் கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. அந்த அடிப்படையில் தான் எமது தலைமைப்பீடம் இதை சாதகமாக பரிசீலிக்கின்றது.

*கேள்வி:* கண்காணிப்புக்குழுவில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உறுப்பினர்களும் உள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய தடை இவ்வுறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?

*பதில்:* நிச்சயமாக அது பாதிப்பை ஏற்படுத்தும். அதனால், எமது தலைமைப்பீடம் ஓரிரு தினங்களில் கூடி இது பற்றி பரிசீலிக்கவிருக்கின்றது. அமைதி முயற்சிகளிலோ சமாதான முன்னெடுப்புக்களிலோ இருதரப்பும் சமத்துவமாக சமதரப்பு என்ற நிலையில் பார்க்கபடுவது அவசியம். அத்தகைய நிலைப்பாடுள்ளவர்களோடு தான் சமாதான முயற்சி பற்றியோ அமைதி முயற்சி பற்றியோ பேசலாம். பக்கச்சார்பான நிலையில் இருதரப்பையும் கையாள, தலையீடு செய்ய, பங்காற்ற முற்படுவதை மக்களாலும் எமது தலைமைப்பீடத்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

*கேள்வி:-* தூதுக்குழுவில் யார் யார் செல்கின்றீர்கள்?

*பதில்:* இதுவரை தலைமைப்பீடம் முடிவெடுக்கவில்லை. ஒஸ்லோவுக்கு செல்வதாக இருந்தாலும் ஒஸ்லோவில் என்ன விடயம் பேசப்படவிருக்கின்றது என்பதை எமது தலைமைப்பீடம் ஓரிரு நாள்களில் கூடி முக்கியமான முடிவுகளை எடுத்து அம்முடிவுகளை எடுத்துச்செல்வதாகவே ஒஸ்லோ பயணம் அமையும்.

*கேள்வி:-* தற்போதைய நெருக்கடி நிலையில் தங்களது போக்குவரத்து ஒழுங்குகள் எந்தளவுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் கொண்டதாக இருக்கும்?

*பதில்:* புறப்படுவதாக இருந்தால் முழுமையாக பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் அனைத்துக்குமே நோர்வே அனுசரணையாளர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று ஏற்கனவே கூறியிருக்கின்றோம். அதை மீண்டும் நாம் உறுதிப்படுத்திய பின்னர்தான் பயணம் அமையும்.

*கேள்வி:* நோர்வே பயணத்துக்கு தென்தமிழீழத்தில் இருந்து தளபதிகள் வன்னிக்கு வருதல் என்ற விடயமும் அடங்குமா?

*பதில்:* ஒஸ்லோவுக்கு பேச்சுவார்த்தைக்காக நாங்கள் செல்லவில்லை. தலைமைப்பீடம் முக்கியமான கட்டத்தில் முக்கியமான தீர்மானத்தை எடுத்தது நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெரிவிப்பதற்கான பயணமே தவிர, சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான பயணம் இல்லை என்பதால் நாம் அதை வலியுறுத்தவில்லை, அதை எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் எமது தளபதிகள், போராளிகளின் பயணம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் தலைவர் சாதகமான முடிவெடுத்திருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள முயன்றுகொண்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

*கேள்வி:* ஐரோப்பிய ஒன்றியமும் இணைத்தலைமை நாடுகளும் சிறிலங்கா அரசு மீது அழுத்தம் கொடுத்த வெளியான செய்தி உண்மையானதா அல்லது வெறுமனே அறிக்கை மயப்பட்டது என்று நினைக்கின்றீர்களா?

*பதில்:* அவர்களால் சிறிலங்கா அரசு பற்றியும் சமாதான விரோதப் போக்குகள் பற்றியும் சொல்லப்பட்ட விடயங்கள் உண்மைக்கு மாறானவை அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை தான். இருந்தாலும் அரசின் பயங்கர வாதத்தை எப்படி தடுக்கலாம்? பயங்கரவாத அரசை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றி சர்வதேச சமூகம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலையாகத்தான் அவர்களின் அறிக்கையின் வெளிப்பாடு இருக்கின்றது.

ஏனெனில், அதில் கூறப்பட்ட பெரும்பாலான விடயங்கள் அரசபயங்கரவாதத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மோசமான நடவடிக்கைகள் பற்றி அவர்கள் எடுத்தக்கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் விடுதலைப்புலிகள் மீது போடப்படுகின்ற அழுத்தத்துக்கு நிகராக அல்லது அதைவிட மேலாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தத்தை போடவேண்டிய நிலையில் அனைத்துலக சமுதாயம் இருக்கின்றது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, இவ்வறிக்கை ஒரு சிந்திக்க வைக்கின்றதாகவும் வெளிப்பாட்டை பார்க்கின்ற போது பயங்கரவாத அரசுகள் பற்றி அனைத்துலக சமுதாயம் விரைவில் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்பதாகவுமே இந்த அறிக்கை அமைந்திருக்கின்றது.

*கேள்வி:* இணைத்தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைகளில் புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதம் என்று குறிப்பிட்டிருக்கின்றது. அரசின் செயற்பாடுகளை ஒட்டுக்குழுக்களின் மீது போட்டுவிட்டு தப்பியுள்ளதாக தோற்றப்பாடு தெரிகின்றதா?

*பதில்:* அனைத்துலக சமூகம் தொடர்ந்து ஒரு தவறை இழைத்துக் கொண்டிருப்பதாகவே கருதுகின்றேன். ஏனெனில், ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு பெரிய கொடுமைபடுத்தப்படுகின்ற மக்கள் மீதும் தலைமை மீதும் அனைத்துலக சமுதாயம் போட்டிருக்கின்ற அழுத்தமும் அதற்கு காரணமானவர்களை கண்டிப்பதில் மென்மையான போக்கை கடைப்பிடிக்கின்றமைதான் இன்று பல இடங்களில- இலங்கைத்தீவில் நெருக்கடிக்கு காரணமாக அமைந்து கொண்டிருக்கின்றது. அனைத்துலக சமுதாயம் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்ற பயங்கரவாத அரசுகளை எவ்வாறு கையாள்வது என்று தீர்க்கமான முடிவுகளை எடுக்கின்ற நேரம் ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:-* ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடைசெய்துள்ள நிலையிலும் தொடர்புகளை பேணப்போவதாக கூறியுள்ளதே?

*பதில்:-* தொடர்பு எவரும் கொள்ளலாம். எமது சமநிலையை குலைத்துவிட்டு தொடர்பு கொள்வதால் எந்த விதமான பயன்களைப் பெறப்போகின்றார்கள் என்பது தான் தெரியவில்லை. ஐரோப்பிய யூனியனின் தடையென்பது தெற்கிலே சிங்கள இனவாதிகள் மட்டத்திலும் அரசமட்டத்திலும் கொண்டாடப்படும் நிலையை நாம் பார்க்கின்றோம். எந்தவிதமான பயங்கரவாதத்தையும் தமிழீர்கள் மீது ஏவிவிடலாம் என்ற துணிவை சிங்களப் பேரினவாதத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. கருத்துக்கள், அறிக்கைகள் இதையே உணர்த் துகின்றன. ஐரோப்பிய யூனியனின் தடை தமிழர்களை கடும்பாதிப்புக்குள் தள்ளியுள்ளது என்பதே எம்மால் உணரமுடிகின்றது. (ச-5,9)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
மாதவன், நம்நதா நடித்த
கேட்டவரெல்லாம் பாடலாம்?
கா.நே: 10.30,2.15,5.30,8.45

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 02.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.